# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு - 2010 - 2011

## தமிழ்மொழி - வளர்நிலை 4

சுட்டெண்:......................................................... நேரம்: 90 மணித்துளிகள்

**1) அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களில் மிகப்பொருத்தமானதைத் தெரிந்து, கீறிட்ட இடங்களில் எழுதுக.**

1. தமிழ் நெடுங்கணக்கில் உள்ள முதலெழுத்துகள் ________________.
   (பதினெட்டு, பன்னிரண்டு, முப்பது)

2 தமிழர் விழாக்காலங்களில் ________________ யில் எழுந்து நீராடுவர்.

   (காலை, வைகறை, மாலை)

3. கூலங்கள் விளைந்து வீடு வந்து சேரும் மாதம் ________________
   (ஆடி, ஆவணி, ஆனி)

4. தோற்கருவிகளில் ஒன்று ________________

   (வீணை, பறை, நாதசுரம்).

5. இனிய நண்பனை ________________ அறியலாம்.

   (இடுக்கணில், இடுக்கனில், இடுக்கநில்)

6. இலக்கணநூல்களில் மிக முதன்மையானது ________________
   (புறநானூறு, தொல்காப்பியம், சிலப்பதிகாரம்)

7. தமிழர் வாழ்வில் ________________ ஒரு சிறந்த பண்பு.
   (இருந்தோம்பல், மருந்தோம்பல், விருந்தோம்பல்)

8. காட்டுராசா என்று அழைக்கப்படுவது ________________.
   (நரி, முயல், சிங்கம்)

9. தன்னைத்தான் விரும்புகிறவன் பிறருக்கு தீங்கு ______________.
(செய்வான், செய்யமாட்டான், செய்கிறான்)

10. தோண்டத் தோண்ட ஊறுவது ______________.
(கடல், கேணி, ஆறு)

11. முத்தமிழ் என்றால் ______________.
(சேரசோழ பாண்டியர், இயல் இசை நாடகம், மா பலா வாழை)

12. தமிழ் உலகின் ______________ மிக்க மொழிகளில் ஒன்று.
(புதுமை, வறுமை, தொன்மை)

13. தமிழ் நெடுங்கணக்கிலுள்ள எழுத்துகளின் எண்ணிக்கை ______________
(247, 30, 216)

14. சேதாவும் அவளது நண்பிகளும் சேர்ந்து ______________விளையாடினாள்.
( கிறிக்கற், கிளிதட்டு, பாண்டி )

15. மிருதங்கம் என்ற தோற்கருவியின் பண்டைய பெயர் ______________.
( மேளம், பறை, தண்ணுமை )

16. தமிழருடைய பண்பாட்டு வரலாற்றைக் கூறும் நூல் ______________.
(புறநானூறு, திருக்குறள், சிலப்பதிகாரம்)

17. நான் இப்பொழுது போகிறேன். நீ ______________ வருவாய்?
(அப்பொழுது, இப்பொழுது, எப்பொழுது)

18. கங்காரு ______________ குட்டியை வயிற்றுப்பையில் வைத்திருக்கும்.
(எனது, தனது, உனது)

19. 'இ' என்னும் எழுத்தின் எழுத்துவகைப் பெயர் ______________
(உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்து)

20. தொன்மை என்றால்______________. .
(புதுமை, இளமை, மிகப்பழைமை)

21. பழமொழி: முயற்சி உடையார்______________ அடையார்.
(மகிழ்ச்சி, இகழ்ச்சி, புகழ்ச்சி)

22. வேறு எந்த மொழியிலும் இல்லாத, தமிழில் உள்ள சிறப்பொலி ________________.
(ல, ள, ழ)

23. தமிழரின் கொண்டாட்டங்களில் ஒன்று ________________
(ஆடிப்பிறப்பு, தீபாவளி, சித்திரைப்பிறப்பு )

24. விரவி என்றால் ________________.
(கலந்து, மறைந்து, குறைந்து)

25. உன் கடமைகளைத் தவறாமல் ________________.
(செய்யாதே, செய், செய்வேன்)

26. இராவணன் தன்கொடியில் ________________ முத்திரையாகக் கொண்டிருந்தான்.
(யாழை, வீணையை, வயலினை)

27. ________________ கொண்டு அம்பலம் ஏற வேண்டும்.
(தன்பலம், தம்பளம், பிறர்பலம்)

28. விழாக்கள் மூலம் நாம் ________________ வளர்த்துக் கொள்ளலாம்.
(வேற்றுமையை, ஒற்றுமையை, பகைமையை)

29. நொடி:- ஐந்து வீட்டக்கு ஒரு முற்றம் ________________
(இடக்கை, வலக்கை, உள்ளங்கை)

30. முத்தமிழ் விழாவிற்கு மக்கள் ________________ வந்தனர்.
(மலைமலையாக, திரள்திரளாக, நிரைநிரையாக)

(புள்ளிகள் 30)

**2) கீழ்க்காணும் பகுதியை வாசித்து, தரப்பட்டுள்ள சொற்களில் இருந்து பொருத்தமானதைத் தெரிந்து கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| அங்கும் | பூம்பனி | மகிழ்ச்சியாக | சறுக்கி | எறிந்து |
|---|---|---|---|---|

இப்போது பனிகாலம்.______________________ கொட்டியிருக்கிறது. சிறுபிள்ளைகள் பூம்பனி உருண்டைகள் செய்து ஒருவருக்கு ஒருவர் ______________________ விளையாடுகின்றனர். அவர்களுடன் நாய்க்குட்டியும் உருண்டைகளைப் பிடிப்பதற்கு ______________________ இங்கும் ஓடுகிறது. சில பிள்ளைகள் பனியில் ஆட்களைப் போல் பொம்மைகள் செய்கின்றனர். இன்னும் சிலர் சறுக்கியில் ______________________விளையாடுகின்றனர். பள்ளிகளுக்கும் இப்போது பனிகால விடுமுறை விடப்பட்டிருக்கின்றது . எனவே, குளிரைப்பற்றிக் கவலைப்படாமல் பிள்ளைகள் விளையாடி மகிழ்கின்றனர். மூத்தோரும் தங்கள் பிள்ளைகளது விளையாட்டைப் பார்த்து அவர்களும் ______________________ இருக்கின்றனர்

(புள்ளிகள் 10)

**3) கீழே தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுக்கு விடை தருக.**

1. அரசன் படை நடத்திச் செல்லும் போது கொட்டும் முரசு எது?

______________________________________________

2. காட்டு அரசனாக வாழ்ந்த விலங்கு எது?

______________________________________________

3. தமிழில் முதலெழுத்துகள் எத்தனை?

______________________________________________

4. அன்பான நண்பனை எப்போது அறியலாம்?

______________________________________________

5. தமிழர் வாழும் இரண்டு நாடுகள் தருக?

______________________________________________

(புள்ளிகள் 10)

**4) கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லை எழுதி, சொல்லியங்களை நிறைவு செய்க.**

| | | | | |
|---|---|---|---|---|
| எழுதிய | உதிர்கின்றன | நறநற | வண்ணவண்ண | கணீர்கணீர் |

1. கோயில் மணி ______________ என்று ஒலித்தது.

2. சேரன் கடுஞ்சினத்தால் பற்களை ______________ எனக் கடித்தான்.

3. மாறன் ______________ கதை நன்றாக இருந்தது.

4. இலையுதிர் காலத்தில் மரங்களிலிருந்து இலைகள் ______________.

5. பூஞ்சோலையில் ______________ மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன.

(புள்ளிகள் 05)

**5) கீழே தரப்பட்டுள்ள சொற்களை உமது வாழிடமொழியில் எழுதுக.**

கொண்டாட்டம் - ______________

நாள்தோறும் - ______________

கணினி - ______________

தொடருந்து - ______________

நாடகம் - ______________

(புள்ளிகள் 05)

6) **தரப்பட்டிருக்கும் பகுதியை வாசித்து, கீழுள்ள வினாக்களுக்கு முழுவிடை தருக.**

எங்கள் தாயகத்தில் பயன்தரும் மரங்களில் பனை முதன்மையானது. அது மிக உயரமாய் வளரும். கிளைகள் இல்லாத மரங்களில் பனையும் ஒன்று. இதன் இலைக்கு ஓலை என்று பெயர். பனை ஓலையை வேலி அடைக்கப் பயன்படுத்துவர். அத்துடன், வீடு வேயவும் பனையோலை உதவுகிறது. அதுமட்டுமா! பனை ஓலையால் பாய், கடகம், பெட்டி என்பன இழைக்கப்படுகின்றன. பனையிலிருந்து நுங்கு, பனம்பழம், பதநீர் போன்றவையும் கிடைக்கும். இவ்வாறு பல பயன்களைத் தரும் மரமாகப் பனை உள்ளது. அதனால், அதைக் கற்பகதரு என அழைப்பர். இவ்வளவு சிறப்பு வாய்ந்த பனைமரங்கள் இன்று அழிவுற்ற நிலையில் காணப்படுகின்றன. எமது பகைவரால் மக்கள் உயிர்கள் மட்டுமா அழிக்கப்பட்டன. இயற்கையும் மரஞ்செடி கொடிகளும் அல்லவா அழிக்கப்பட்டன.

1. பனையிலிருந்து கிடைக்கும் பயன்கள் இரண்டைத் தருக.

______________________________

______________________________

2. எங்கள் தாயகத்தில் வளரும் மரங்களில் முதன்மையானது எது?

______________________________

______________________________

3. பனையை எப்படி அழைப்பர்?

______________________________

______________________________

4. பனையின் இலைக்கு என்ன பெயர்?

______________________________

______________________________

5. கிளைகள் இல்லாத வேறு ஒரு மரத்தின் பெயரை எழுதுக.

______________________________

______________________________

(புள்ளிகள் 10)

**7) ஏற்ற சொற்களை எழுதி, சொல்லியங்களை நிறைவு செய்க.**

1. போர்முரசை படைமுரசு என்றும் ____________________.
2. சிலப்பதிகாரம் இளங்கோஅடிகளால் ____________________.
3. யாழ்ப்பாணத்து நல்லூரில் வில்லவராய முதலியார் ____________________.
4. சிறுவர்கள் விளையாட்டுத்திடலில்____________________.
5. வாழ்க்கை வழிகாட்டியான திருக்குறள் நட்பைப்பற்றிக் ____________________.

(புள்ளிகள் 10)

**8) ஒழுங்குபடுத்தி எழுதுக.**

1.வாழும் / தமிழ் / தொன்மையானது / இன்று / மொழிகளுள்

____________________

2. எல்லோரும்/குடித்து/ ஆடிப்பிறப்பன்று / மகிழ்வோம்/ ஆடிக்கூழ்

____________________

3. அறிந்திருந்தனர்/பண்டைத்தமிழர் /இசையின்/நுணுக்கங்களை / நன்கு

____________________

4. தனித்துவத்தைக் / விழாக்கள் / காட்டுகின்றன / ஓரினத்தின்


____________________

5. பழந்தமிழ்க் / வேண்டும் / கலைகளைப் / நாம் / பேண

____________________

(புள்ளிகள் 05)

9) தரப்பட்டுள்ள படத்தைப் பார்த்து, 30 சொற்களுக்குக் குறையாமல் உங்கள் கற்பனையில் கதை எழுதுக.



(புள்ளிகள் 15